# வாக்களிக்கவில்லை எனில், உங்கள் குரல் வெளிப்படாது

## வாக்காளர் பதிவு மற்றும் வாக்காளர் அடையாள அட்டை

**தேர்தல் சட்டம் (Elections Act) (2022) நாம் வாக்களிக்கும் முறையை மாற்றியுள்ளது. நீங்கள் லண்டன் வாசியாக இருந்தால், நேரில் வந்து வாக்களிக்க இப்போது புகைப்பட அடையாள அட்டையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவத்தைக் காட்ட வேண்டும்.**

## எவ்வாறு வாக்களிப்பது

**வாக்களிக்க மூன்று வெவ்வேறு வழிகள் உள்ளன:**

**நேரில் வாக்களிப்பது:** உங்கள் முகவரிக்கு வாக்களிப்பு அட்டை அனுப்பப்படும், அதில் உங்கள் உள்ளூர் வாக்குச் சாவடி எங்குள்ளது என்ற விவரம் இருக்கும். வாக்குச் சாவடியில் வாக்களிக்க, ஓர் அசல் ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவத்தைகொண்ட புகைப்பட அடையாள அட்டையினை நீங்கள் கொண்டு வர வேண்டும்.

**தபால் மூலம்:** உங்களால் நேரில் வந்து வாக்களிக்க முடியாவிட்டால், நீங்கள் தபால் வாக்கிற்கு விண்ணப்பிக்கலாம். தபால் மூலம் வாக்களிக்க நீங்கள் புகைப்பட அடையாள அட்டையை வழங்க வேண்டியதில்லை. உங்கள் கையொப்பம் மற்றும் பிறந்த தேதி உறுதிப்படுத்தல் உள்ளிட பிற அடையாளச் சரிபார்ப்புகள் உள்ளன.

**பதிலாள் மூலம்:** உங்களால் நேரில் வந்து வாக்களிக்க முடியாவிட்டால் (எ.கா. உடல்நலக் காரணங்களுக்காக), உங்கள் சார்பாக வாக்களிக்க ஒருவரை நீங்கள் நியமிக்கலாம். அவ்வாறு செய்ய நீங்கள் ஒரு படிவத்தைப் பூர்த்தி செய்து உங்கள் உள்ளூர் தேர்தல் பதிவு அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். உங்கள் சார்பாக வாக்களிக்க நீங்கள் நியமித்தவர் அவரது சொந்த புகைப்பட அடையாள அட்டையைக் கொண்டு வர வேண்டும்.

https://registertovote.london/

Greater London Authority, சிட்டி ஹால், கமல் சுஞ்சி வே, லண்டன், E16 1ZE வாயிலாக ஆதரவளிக்கப்படுகிறது. ஷவுட் அவுட் UK, 240 போர்டோபெல்லோ சாலை, லண்டன், W11 1LL வாயிலாக அச்சடித்து விளம்பரப்படுத்தப்பட்டது.